**செய்தி வெளியீடு எண்: 105** **நாள்: 06.02.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(6.2.2019)** கோயம்புத்தூர் மாவட்டம், முதலிப்பாளையத்தில், பேரூர் ஆதினம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளையின் சாந்தலிங்கர் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை

---

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,

பேரூர் ஆதினம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளை மூலம் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவமனை கட்டடத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மிகச் சிறப்பான விழாவிலே கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய **அண்ணன் திரு.கே.தனபால் அவர்களே !**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் சகோதரர் திரு. **எஸ்.பி.வேலுமணி அவர்களே!**

சட்டப் பேரவையின் துணைத்தலைவர் அண்ணன்
திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே!

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய இந்த மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு காரணமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களே!

திரு. இராமனந்த குமரகுருபர அடிகளார் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு.சி. மகேந்திரன் அவர்களே!
நாடாளுமன்ற உறுப்பினர் திரு.A.K.செல்வராஜ் அவர்களே!
மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள்
மரியாதைக்குரிய சகோதரர் திரு. அர்ச்சுனன் அவர்களே !
திரு. அருண்குமார் அவர்களே !
திரு. கனகராஜ் அவர்களே !
திரு. சண்முகம் அவர்களே !
திரு. சின்னராஜ் அவர்களே !
திருமதி. கஸ்தூரி வாசு அவர்களே !

திரு. ஆறுக்குட்டி அவர்களே !
திரு. குணசேகரன் அவர்களே !
திரு.விஜயகுமார் அவர்களே !
திரு.ஈஸ்வரன் அவர்களே !

மற்றும் முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன்
திரு.வேலுச்சாமி அவர்களே!
சகோதரர் திரு.ஆனந்தன் அவர்களே!
முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்களே,

வருகை தந்திருக்கின்ற கோவை மருத்துவமையம் மற்றும் மருத்துவமனையின்
தலைவர் டாக்டர் ஜி.பழனிசாமி அவர்களே!

மருத்துவமனையின் இயக்குநர் அவர்களே மற்றும்
இந்த அறக்கட்டளையினுடைய நிர்வாகிகள் மரியாதைக்குரிய
திரு.மாணிக்கம் அவர்களே, பன்னாரி குழுத்தலைவர்
திரு. பாலசுப்பிரமணியம் அவர்களே!

மற்றும் ரூட்ஸ் குழும தலைவர் திரு.எஸ்.ராமசாமி அவர்களே!
திரு.ஆறுமுகசாமி அவர்களே!
ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் கல்லூரியின் தலைவர்
திருமதி மலர்விழி அவர்களே!
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற, மேடையிலே வீற்றிருக்கின்ற ஆன்றோர் பெருமக்களே! சான்றோர் பெருமக்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!

கழகத்தினுடைய பல்வேறு பொறுப்பாளர்களே,
கழக ஒன்றிய செயலாளர் அவர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆரோக்கியமான நாடு தான் வளமான நாடு என கருதப்படும். தரமான மருத்துவ சேவை, மாநிலத்தின் மூலை முடுக்குகளில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களின் அரசு பல சுகாதார திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அது மட்டுமின்றி, மாறிவரும் தொழில் நுட்ப வசதிகளை உள்ளடக்கிய தரமான மருத்துவ சேவையை மக்களுக்கு வழங்குவதிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சுகாதாரத் துறைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு அதிக முக்கியத்துவம் அளித்து நிதி நிலை அறிக்கையில் அதிகமான நிதி ஒதுக்கி வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசால் சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி 62,705.17 கோடி ரூபாய். இதன் பயனாக அரசு மருத்துவமனைகள் அனைத்தும் சிறப்பாக பராமரிக்கப்பட்டு, தரமான மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. இன்றைக்கு அரசு மருத்துவமனைகளை பொதுமக்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர். மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை அளிப்பதில் அரசு மருத்துவமனைகளோடு, தனியார் மருத்துவமனைகளும் சிறப்பாக சேவையாற்றி வருகிறது. இன்றைக்கு வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும், தரமான மருத்துவ சிகிச்சை குறைந்த செலவில் பெறுவதற்காக அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டிற்குத் தான் வருகிறார்கள். அந்த அளவிற்கு வளர்ச்சியடைந்து “மருத்துவ சுற்றுலா” தளமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த நிலையை அடைய தனியார் மருத்துவமனைகளும் பெரும் பங்காற்றியுள்ளது என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தென் இந்தியாவின் தொழில் நகரம் என்றழைக்கப்படும் கோயம்புத்தூர் மாநகர் பலதரப்பட்ட மக்களை உள்ளடக்கியது. தொழிலாளர்களும், வணிகர்களும் நிறைந்த நகரம் இது. ஆகவே, இந்த மாவட்டமும், அருகிலே

இருக்கின்ற திருப்பூர் மாவட்டம், இரண்டு மாவட்டங்களுமே இன்றைக்கு தொழில் வளம் மிகுந்த மாவட்டம், நிறைய விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் நிறைந்த மாவட்டம். ஆகவே, ஏழைகள் அதிகமாக இருக்கின்ற மாவட்டத்திலே இந்த மருத்துவமனை துவக்கப்பட்டது பொருத்தமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். இம்மருத்துவமனை இன்றைக்கு பல்வேறு சிறப்புகள் அடங்கிய மருத்துவமனையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

1 லட்சத்து 15 ஆயிரம் சதுர அடியில் இந்த மருத்துவமனை கட்ட இருப்பதாவும், 110 அறைகள் கொண்ட மருத்துவமனையாக இருக்கும் என்றும் இங்கே நான் பேசுகின்றபொழுது, என்னிடத்திலே சொல்லி இருக்கின்றார்கள். பல்நோக்கு மருத்துவமனையாக இந்த மருத்துவமனை அமைகின்றது. இந்த மருத்துவமனை அமைகின்றபொழுது, இந்த சுற்றுப் பகுதியில் இருக்கின்ற அத்தனை பேரும் சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை, இந்த மருத்துவமனையால் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, அம்மாவினுடைய அரசு இன்றைக்கு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இந்த மருத்துவமனை ஏழை, எளிய மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் மருத்துவ சேவை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அம்மாவினுடைய அரசு மருத்துவத் துறையில் மிகப் பெரிய சாதனையை படைத்துக் கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட கிராமங்களில் மருத்துவமனை அமைகின்றபொழுது, சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமத்தில் இருக்கின்ற ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் எல்லாம் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை பேரூர்

ஆதினம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளை இன்றைக்கு நிறைவேற்றி இருப்பது போற்றுதலுக்குரிய ஒரு செயலாகும்.

தமிழகத்திலே ஆன்றோர் பெருமக்கள், சான்றோர் பெருமக்கள் இருந்தாலும் கூட, எனக்கு முன்னால் பேசியவர் குறிப்பிட்டதைப் போல, கல்வியிலே அறக்கட்டளை துவக்குகின்றார்கள். ஒரு நாடு வளம் பெற வேண்டுமென்றால் கல்வி கிடைக்க வேண்டும். எந்த மாநிலத்தில் கல்வி கிடைக்கின்றதோ அந்த மாநிலம் வளரும். அந்த மாநிலத்திலே வளர்ச்சியை பார்க்க முடியும். அங்கேதான், உயர்வு காணப்படும், பொருளாதார மேம்பாடு அடையும், அமைதி நிலவும், அன்பு உயரும், ஒரே நேரத்தில் அத்தனையும் கிடைக்க வேண்டுமென்றால் கல்வி உயரவேண்டும். அப்படி கல்விசார் மாவட்டமாக இன்றைக்கு கோவை மாவட்டம், திருப்பூர் மாவட்டம் திகழ்ந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் மருத்துவம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மருத்துவமனை மிகச் சிறப்பான மருத்துவமனை. Kovai Medical Center and Hospital மிக தரமான மருத்துவ சேவையை செய்து கொண்டிருக்கின்றார்கள். அதற்கு பக்கபலமாக இந்த மருத்துவமனை வளரும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இந்த அறக்கட்டளையால் செயல்படுத்தப்படு இந்த மருத்துவமனை இந்த மருத்துவமனை இன்றைக்கு ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய மருத்துவமனையாக அமைந்திருப்பதற்கு பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**